மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.
அ.வ.எண்.86/2020

வாக்குமூலம்: வா.சா.1 ஆறுமுகம்

04.10.2023: சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமானத்தின்பேரில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி :– 6) எங்களுக்குள் செய்துகொண்ட பாக ஆவணத்தில் பொது வாய்க்கால் வழியாக நடந்து செல்லும் பாதை பாத்தியம் பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பொதுக்கிணற்றை ஒட்டி உள்ள எனக்கு பாத்தியப்பட்ட புல எண்.137/5 ஏ 4 என்ற நிலமானது புல எண்.137/5 ஏ 1–ஐ விட உயரமானது என்றால் சரிதான். புல எண் 137/5 ஏ 1–லிருந்து வடக்கிலிருந்து தெற்கில் உள்ள புல எண்.137/5 ஏ 4 –க்கு தண்ணீர் வாய்க்கால் வழியாக எடுத்துச்செல்ல முடியாது என்றால் சரிதான். எனவே நான் கோரியுள்ள பரிகாரம் எதுவும் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

7) நில வாய்க்கால் அழித்து 3 ஆண்டுகளுக்குமேல் இருக்குமா என்றால் இருக்கும். அதன் பின்னிட்டுத்தான் வழக்கு தாக்கல் செய்தேன். எனது பூமியில் அழிக்கப்பட்ட பொது வாய்க்காலை மீண்டும் அமைத்து கொடுக்க தயாராக உள்ளேனா என்றால் உள்ளேன். தாவா பொதுக்கிணற்றில் தற்பொழுது ஆயிள் இன்ஜின் வைத்து 2ம் பிரதிவாதி மட்டும்தான் நீர் இறைத்து விவசாயம் செய்து வருகிறார் என்றால் சரிதான். நான் தாவா பொது கிணற்றில் தண்ணீர் இறைத்து 3 முதல் 4 வருடங்கள் இருக்கும்.

8) வா.சா.ஆ.1 தாவா மாதிரி வரைபடத்தில் கண்டுள்ள விபரங்கள் எனக்கு தெரியும். பொதுப்பாதைக்கும், தென்வடல் வாய்க்காலுக்கும் இடைப்பட்ட தூரம் எவ்வளவு என்றால் சுமார் 150 அடி இருக்கும். 2ம் பிரதிவாதிக்கு எழுத, படிக்கத்தெரியாது என்றால் சரிதான். எனக்கும் எழுத, படிக்க தெரியாது. புல எண்.137/5 ஏ 1 நிலத்தில் உள்ள எனது கிணற்றிற்கு அமராவதி ஆற்றுத்தண்ணீரை எடுத்து வந்து நிரப்பி பயன்படுத்துகிறேன் என்றால் சரியல்ல. தனிக்கிணற்றை சுமார் 7 ஆண்டுகளுக்கு முன்பாக நான் வெட்டினேன். எனக்கும் எனது உடன்பிறந்த சகோதரர்களான பிரதிவாதிகளுக்கும் இடையே சொத்தில் கம்பி வேலி போடுவது சம்பந்தமாகத்தான் பிரச்சனை உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி பிரச்சனையை திசை திருப்புவதற்காக நான் இந்த பொய்யான வழக்கை தாக்கல் செய்து பாக ஆவணத்தில் இல்லாத உரிமைகளை கோரி

இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u> :– இல்லை.

N GNANASAMBANDAM

Digitally signed by N GNANASAMBANDAM
Date: 2023.10.04 18:17:50 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பழனி.